1967 ஜூலை 11]

நோட்டீஸ் அனுப்பப்பட்டு சொஸைட்டியைச் சேர்ந்த குழுவினர் பதிலுரை அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநரும், பதிவாளரும் கலந்து இதிலே நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Is it a fact that the orders were passed a few months ago and still they have not at all been implemented? Is the Government aware of the long gap between the passing and the implementation of the order?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நோட்டீஸ் முதலில் கொடுக்கப்பட்டது; அதையொட்டி சொஸைட்டியின் பதிலும் வரப்பெற்றிருக்கிறது ; பதிலையொட்டி எடுக்கவேண்டிய நடவடிக்கையைப் பற்றி இயக்குநரும், பதிவாளரும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனி, அரக்கோணம்

*267 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா : மு.ப. 10-30

(அ) அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு (Southern Asbestos Company 1966) 1966-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தாரால் கடன் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

(உ) அத்தொகை எத்தனை வருட தவணை முறையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரக்கோணத்தில் உள்ள சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு சென்னை தொழில் முதலீடு கார்ப்பரேஷன் ரூ. 25 லட்சம் கடனாகக் கொடுத்திருக்கிறது.

(உ) அக்கடன் தொகை எட்டு ஆண்டு தவணையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : 25 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் கம்பனியின் மூலதனம் எவ்வளவு என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அந்தக் கடன் இந்தப் புது அரசு பதவியேற்ற பின் கொடுத்ததா ? அல்லது அதற்கு முன்பு கொடுத்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 12—7—1965-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.